www.kalvikural.com

19228

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை 6

ந.க.எண் 20883/ஜி1/இ1/2013, நாள் 21.11.2013

= = =

பொருள் பள்ளிக் கல்வி – ஆங்கில வழிக் கல்வி – 2012 –13ம் கல்வியாண்டில் ஆங்கில வழிப் பிரிவுகள் தொடங்க அனுமதி வழங்கப்பட்ட பள்ளிகளில் 2013 –14ம் கல்வியாண்டில் 7ம் வகுப்பிலிருந்தும் ஆங்கில வழி இணைப் பிரிவுகள் தொடங்குதல் – அரசாணை வெளியிடப்பட்டமை – சார்பு.

பார்வை அரசாணை (நிலை) எண் 171, பள்ளிக் கல்வி (பக5(1)த் துறை, நாள் 30.8.13.

= = =

2012–13ம் கல்வியாண்டில் 165 அரசு உயர்நிலை / அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 6ம் வகுப்பில் ஆங்கில வழி இணைப் பிரிவுகள் தொடங்கிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பள்ளிகளில் 2013–14ம் கல்வியாண்டு முதல் 7ம் வகுப்பு தொடங்கி, தொடர்ந்து வகுப்புகள் நடத்திட அனுமதி வழங்கி பார்வையிற் காணும் அரசாணையில் உத்திரவிடப்பட்டுள்ளது. அரசாணை நகல் இத்துடன் இணைத்து அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பப்படுகிறது. அரசாணை நகலினை சம்பந்தப்பட்ட 165 பள்ளிகளுக்கும் அனுப்பிடவும், 7ம் வகுப்பு தொடங்கி, தொடர் வகுப்புகள் நடைபெறுவதை கண்காணித்திடவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இணைப்பு அரசாணையின் நகல்

பள்ளிக் கல்வி இயக்குநருக்காக

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

சி.கா/சி5

www.kalvikural.com

சுருக்கம்

பள்ளிக் கல்வி – 2012–13 ஆம் கல்வியாண்டில் ஆங்கில வழிப்பிரிவுகள் தொடங்க அனுமதி வழங்கப்பட்ட பள்ளிகளில், 2013–14ஆம் கல்வியாண்டு முதல் தொடக்கக் கல்வித் துறையின் கீழ் உள்ள பள்ளிகளில் இரண்டாம் வகுப்பிலிருந்தும், பள்ளிக் கல்வித் துறையின் கீழ் உள்ள பள்ளிகளில் 7 ஆம் வகுப்பிலிருந்தும் ஆங்கில வழி இணைப்பிரிவுகள் தொடர்ந்து நடைபெற்றிட அனுமதி வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

பள்ளிக்கல்வி [பக5 (1) ] துறை

அரசாணை (நிலை) எண்.171

நாள் : 30.08.2013
(திருவள்ளுவர் ஆண்டு 2044
ஆவணி 14)

படிக்க :

1. அரசாணை (நிலை) எண்.180, பள்ளிக் கல்வித் துறை, நாள் 17.07.2012.
2. அரசாணை (நிலை) எண்.193, பள்ளிக் கல்வித் துறை, நாள் 26.07.2012.
3. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.20883 /ஜி1 / இ1 / 2012, நாள் 05.12.2012 மற்றும் 24.05.2013.
4. தொடக்கக் கல்வி இயக்குநரின் கடித ந.க. எண்.11640 /இ1 /2012, நாள் 19.03.2013 மற்றும் 10.07.2013.

ஆணை :-

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் பள்ளி மாணவர்களின் ஆங்கில மொழித் திறனை மேம்படுத்தும் வகையில் முதற்கட்டமாக, 2012–13 ஆம் கல்வியாண்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 10 ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் / அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் வீதம் (3 ஊராட்சி ஒன்றிய பள்ளிகள், 2 ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகள் மற்றும் 5 அரசு உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகள்) 320 பள்ளிகளில் 22,400 மாணவர்கள் பயன்பெறும் வகையில் ஒன்று மற்றும் ஆறாம் வகுப்பில் தலா இரண்டு ஆங்கில வழி இணைப் பிரிவுகள் தொடங்க அனுமதி அளித்தும், மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் பள்ளிகளின் பட்டியல் விவரம் குறித்தும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே மூன்று மற்றும் நான்கில் படிக்கப்பட்ட கடிதங்களில், மேற்கண்ட அரசாணைகளின்படி மாணவர்களின் ஆங்கில மொழித்திறனை மேம்படுத்தும் பொருட்டு, 2012–13 ஆம் கல்வியாண்டில் ஆங்கில வழிப்பிரிவுகள் தொடங்க அனுமதி வழங்கப்பட்ட பள்ளிகளில், தொடர்ந்து 2013–14 ஆம் கல்வியாண்டு முதல் தொடக்கக் கல்வி துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் இரண்டாம் வகுப்பிலிருந்தும், பள்ளிக் கல்வித் துறையின் கீழ் உள்ள பள்ளிகளில் ஏழாம் வகுப்பிலிருந்தும் ஆங்கில வழிப்பிரிவுகள் தொடர்ந்து நடத்திட அனுமதி வழங்குமாறு தொடக்கக் கல்வி இயக்குநர் / பள்ளிக் கல்வி இயக்குநர் ஆகியோர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

www.kalvikural.com



3) தொடக்கக் கல்வி இயக்குநர் மற்றும் பள்ளிக் கல்வி இயக்குநர் ஆகியோரின் கருத்துருவை அரசு நன்கு பரிசீலித்து, பள்ளி மாணவர்களின் ஆங்கில மொழித் திறனை மேம்படுத்தும் பொருட்டு, கீழ்க்காணுமாறு முடிவு செய்து, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது :–

(அ) 2012–13ம் கல்வியாண்டில் தொடக்கக் கல்வித் துறையின் கீழ், ஒன்றாம் வகுப்பில் ஆங்கில வழி இணைப்பிரிவுகள் தொடங்கப்பட்ட பள்ளிகளில், தொடர்ந்து 2013–14 ஆம் ஆண்டு முதல் இரண்டாம் வகுப்பிலிருந்து ஆங்கில வழிப்பிரிவுகள் தொடர்ந்து நடத்திட அனுமதி வழங்கப்படுகிறது.

(ஆ) 2012–13ம் கல்வியாண்டில் பள்ளிக் கல்வித்துறையின் கீழ், 6 ஆம் வகுப்பில் ஆங்கில வழி இணைபிரிவுகள் தொடங்கப்பட்ட பள்ளிகளில், தொடர்ந்து 2013–14ஆம் ஆண்டு முதல் 7–ஆம் வகுப்பிலிருந்து ஆங்கில வழிப்பிரிவுகள் தொடர்ந்து நடத்திட அனுமதி வழங்கப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த.சபிதா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்,

பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6.
இயக்குநர், மாநில கல்வியியல் ஆராய்ச்சி
(ம) பயிற்சி இயக்ககம், சென்னை–9.

நகல்:

நிதித்(கல்வி II) துறை சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும்
இளைஞர் நலத்துறை அமைச்சரின் அலுவலகம், சென்னை–9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்